இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 140 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 14 – ஞாயிற்றுக்கிழமை 29 டிசம்பர் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 140: Thiruvalluvar Year - 2055 - Margazhi 14 - Sunday 29 December 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் மேலும் ஒரு மைல் கல்!

# தூத்துக்குடியில் ரூ.32.50 கோடியில் 'மினி டைடல்' பூங்கா!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.12.2024) தலைமைச் செயலகத்தில், நபார்டு வங்கியின் தலைமைப் பொது மேலாளர் ஆர்.ஆனந்த் சந்தித்துப் பேசினார். உடன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நபார்டு வங்கியின் துணைப் பொது மேலாளர் ஜி.சந்தானம், உதவிப் பொது மேலாளர் எம்.சுந்தரராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, டிச. 29 – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடியில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த 72,590 மாணவியர்க்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கிடும் 'புதுமைப் பெண்' திட்டத்தின் விரிவாக்கப் பணிகளை நாளை (30.12.2024) தொடங்கி வைக்கிறார். மேலும் 63,000 சதுர அடி பரப்பளவில் 4 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள 'மினி டைடல்' பூங்காவை இன்று (29.12.2024) திறந்து வைத்து உரையாற்றுகிறார்.**

அதன் விவரம் வருமாறு:–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ஆம் ஆண்டில் ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக, குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்கள்.

பெண்களுக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயண வசதி தரும் விடியல் பயணத் திட்டம், இல்லத்தரசிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசுப் பள்ளிகளில் வழங்கும் உயர்கல்வியில் சேரும் மாணவியர்க்கு மாதம் 1,000 ரூபாய் தரும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர் கல்வி உறுதித் திட்டம் எனும் புதுமைப் பெண் திட்டம் முதலான பல திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்று வருகிறார்கள்.

இத்திட்டங்களுள் புதுமைப் பெண் திட்டம் 5.9.2022 அன்று வடசென்னை பாரதி மகளிர் கல்லூரில் முதன் முதலில் தொடங்கப்பட்டு;

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடியில் 30.12.2024 திங்கட்கிழமை அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் விழாவில் 'புதுமைப் பெண்' திட்டத்தின் விரிவாக்கப் பணிகளைத் தொடங்கி வைக்கிறார்கள்.**

இத்திட்டம், அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேரும் மாணவியர்க்கு மாதம் 1,000 ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது.

**34 சதவிகித மாணவியர் கூடுதலாக உயர்கல்வியில் சேருகின்றனர்!**

இத்திட்டம், வறுமை காரணமாக உயர்கல்வியில் சேர முடியாத மகளிர்க்கு உயர் கல்வி வாய்ப்பை தருகிறது. பெற்றோரின் பொருளாதாரச் சுமையை குறைக்கிறது. இளம் வயது திருமணங்களைத் தடுக்கிறது. மாணவியர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கிறது. ஏறத்தாழ, 34 சதவீதம் மாணவியர் இத்திட்டத்தின் காரணமாக கூடுதலாக உயர்கல்வியில் சேர்கின்றனர்.

'புதுமைப் பெண்' திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக, திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் உள்ள இந்து கல்லூரியில் 8.2.2023 அன்று தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து, மாநிலத் திட்டக்குழு நடத்திய ஆய்வில் இதுவரை 2இலட்சத்து 30ஆயிரத்து 820 மாணவிகள் பயனடைந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

**அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த மாணவியர்க்கும் பயன் தருகிறது புதுமைப் பெண் திட்டம்.**

புதுமைப் பெண் திட்டம் அரசுப் பள்ளிகளில் படித்துள்ள

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## மன்மோகன்சிங் உடல் ராணுவ மரியாதையுடன் தகனம்!

### குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு – பிரதமர் மோடி – சோனியா காந்தி – ராகுல் காந்தி – மல்லிகார்ஜுன கார்கே – திருச்சி சிவா – ஆ.இராசா இறுதி மரியாதை!

புதுடெல்லி, டிச. 29 –

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் இரவு மறைவெய்தினார். டெல்லியில் உள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர், பல்வேறு மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து மன்மோகன்சிங் உடல் நேற்று காலை டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள், பொதுமக்கள் மன்மோகன்சிங் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இதைத்தொடர்ந்து காங்கிரஸ் அலுவலகத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட ராணுவ வாகனத்தில் மன்மோகன்சிங் உடல் யமுனா நதிக்கரையான நிகம்போத் பகுதிக்கு ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது.

யமுனை நதிக் கரையில் அமைந்துள்ள நிகம்போத் காட் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட மன்மோகன்சிங் உடலுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், சபாநாயகர் ஓம் பிர்லா, பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித்ஷா உள்ளிட்டோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் தலைவர்கள் மன்மோகன் சிங் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து சீக்கிய மத முறைப்படி சடங்குகள் நடைபெற்றன.

பின்னர், ராணுவ மரியாதையுடன் மன்மோகன்சிங் உடல் தகனம் செய்யப்பட்டது.

மன்மோகன்சிங் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் பூடான் மன்னர் ஜிம்கே கேசர் நம்கேல் பங்கேற்று இறுதி மரியாதை செலுத்தினார்.

தி.மு.க சார்பில் மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவர் திருச்சி சிவா, மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மன்மோகன்சிங் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## தி.மு.க. அங்கம் வகித்த

# மன்மோகன் சிங் ஆட்சியில் செழித்த தமிழ்நாடு!



### திட்டங்களைப் பட்டியலிட்டு – முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. அறிக்கை!

**சென்னை, டிச. 29–**

**"தி.மு.க. அங்கம் வகித்த மன்மோகன் சிங் ஆட்சியில் செழித்த தமிழ்நாடு" என்றும் மன்மோகன் சிங் ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு கிடைத்த நன்மைகளையும் பட்டியலிட்டு மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. அறிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்தியாவின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, பல கோடி குடும்பங்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்டெடுத்த பொருளாதார மீட்பர் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள்.

1990–களில் பொருளாதாரம் திக்கற்ற நிலையில் கிடந்த போது தாராளமயமாக்கல் கொள்கையைத் துணிச்சலோடு அமல்படுத்தி, இந்தியாவை எட்டுக்கால் பாய்ச்சலில் பயணிக்க வைத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கட்டியெழுப்பிய கூட்டணியால் 2004 மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி நாற்பது இடங்களில் வென்றது. டெல்லிக்குச் சென்று மன்மோகன் சிங் தலைமையில் கூட்டணி ஆட்சி அமைய கலைஞர் அவர்கள் பெரும் துணையாக நின்றார்.

அடுத்து வந்த 2009 மக்களவைத் தேர்தலிலும் வெல்ல இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெரும் பங்காற்றினார். அந்த இரண்டு தேர்தல்களிலும் வென்று தி.மு.க. கூட்டணி ஒன்றியத்தில் அங்கம் வகித்ததற்கு கலைஞரும் தளபதியும் கருவிகளாக இருந்தார்கள்.

**ஒன்றிய அமைச்சர்களாக 21 தமிழர்கள் இருந்தனர்!**

தி.மு.க. அங்கம் வகித்த 2004 – 2014 ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்த போது எண்ணற்ற திட்டங்களைத் தமிழ்நாட்டிற்கு வழங்கினார். பத்தாண்டு கால மன்மோகன் சிங் அமைச்சரவையில் தி.மு.க. உள்ளிட்ட 21 தமிழர்கள் ஒன்றிய அமைச்சர்களாக இடம் பெற்றனர். 8 காபினட் அமைச்சர்கள், 13 இணை அமைச்சர்கள் என மிக அதிக அளவில் தமிழர்கள் கோலோச்சினார்கள். இன்றைக்கு மோடி அமைச்சரவையில் தமிழர்கள் நிலை என்ன என எண்ணிப் பார்த்தால், இந்த மகத்தான சாதனையை உணர முடியும்.

**தமிழ்நாட்டிற்குக் கிடைத்த திட்டங்கள்!**

நிதி, நெடுஞ்சாலை, தகவல் தொடர்பு தொழில் நுட்பம், சுகாதாரம் எனப் பல முக்கிய துறைகளை பெற்று, தமிழ்நாட்டிற்கு எண்ணற்ற திட்டங்களை மன்மோகன் சிங் ஆட்சியின் போது கொண்டு வந்தோம்.

- தமிழ் செம்மொழியாக பிரகடனம். சென்னையில் செம்மொழித் தமிழாய்வு நிறுவனம்.
- மிகப் பெரிய போக்குவரத்து மேம்பாலங்கள்.
- சேலத்தில் புதிய இரயில்வே மண்டலம்.
- தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.
- சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு.
- திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம்.
- கடல்சார் தேசிய பல்கலைக் கழகம்.
- இந்தியாவிலேயே முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான 3 ஜி தகவல் தொழில் நுட்பத் திட்டம்.
- 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி. 32 சதவிகிதமாக இருந்த தொலைபேசி அடர்த்தி 80 சதவிகிதமாக உயர்வு.
- 3,276 கிலோ மீட்டர் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மேம்பாடு.
- ஒரகடத்தில் மத்திய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை ஆராய்ச்சி மையம்.
- 1,553 கோடி ரூபாய் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேச தர அளவுக்கு உயர்த்தப்பட்டு, புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்.
- சென்னை துறைமுகம் –மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம்.
- நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்.
- சென்னை மாநகரில் மெட்ரோ இரயில்.
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்.
- 6,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான தேசிய நெடுஞ்சாலை.

இப்படி எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு வரக் காரணமாயிருந்தார் மன்மோகன் சிங் அவர்கள். ஏழை நடுத்தர இளைஞரின் உயர் கல்வி கனவை நனவாக்கிய உயர் கல்விக்கான கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டம், வேலையின்மையால் கிராமப் புறத்தினர் பட்டினி கிடக்கக் கூடாது என்ற நோக்கோடு கொண்டு வரப்பட்ட நூறு நாள் வேலை திட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் என அடுக்கடுக்காக சொல்லிக் கொண்டே போகலாம்.

**அரைவேக்காடுகளுக்கு கடந்த மாதம் நடந்ததும் தெரியாது – சாதனைகளும் புரியாது!**

2024 மக்களவைத் தேர்தலில் நாற்பதற்கு நாற்பது வென்ற தி.மு.க. கூட்டணி எம்.பி.க்கள், நாடாளுமன்றக் கேண்டினில் வடையும் பஜ்ஜியும் தானே சாப்பிடுவார்கள் என வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டும் ஏளன பேச்சு பேசும் அரசியல் சூனியங்களுக்குக் கடந்த குளிர்கால கூட்டத் தொடரில் தமிழ்நாட்டு எம்.பி.க்கள் என்னவெல்லாம் செய்தார்கள்? என்ற ஒரு பட்டியலை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசியல் அரைவேக்காடுகளுக்குக் கடந்த மாதம் நடந்ததும் தெரியாது கடந்த கால சாதனைகளும் புரியாது.

மாநிலங்களை மதிக்கும் ஒன்றிய அரசு அமைந்தால், அதன் ஆட்சி அதிகாரத்தில் தமிழக எம்.பி.க்கள் இடம் பெற்றால், என்னவெல்லாம் நற்காரியங்கள் நடக்கும் என்பதற்கான சான்றுகள் மன்மோகன் சிங் ஆட்சியின் மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்.

பிரதமர் அடிக்கல் நாட்டிய ஒரு மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையையே ஆறு ஆண்டுகளாக கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு மோடி ஆட்சி என்ன செய்தது? என்பதை ஒற்றைச் செங்கல் சாட்சியாக நிற்கிறது. தமிழகத்தின் ஒன்றிய அமைச்சராக ஒற்றை ஆளாக முருகன் சாதித்தது என்ன என்பதை ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

### கல்விதான் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் முன்னேற்றும் ஆயுதம் – மன்மோகன் சிங்!

**"இன்று நான் என்னவாக இருக்கிறேன் என்பது எனது கல்வியால் தீர்மானிக்கப்பட்டது" என்றார் மன்மோகன் சிங் அவர்கள். கல்விதான் ஒட்டு மொத்த சமூகத்தையும் முன்னேற்றும் ஆயுதம் என அதன்படியே தன் வாழ்வை அமைத்து, அதன் வழியே நல்லாட்சி நல்கி இன்று நம்மை விட்டுப் பிரிந்துள்ளார் மன்மோகன் சிங் அவர்கள்.**

**"கல்விதான் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் முன்னேற்றும் ஆயுதம்" – மன்மோகன் சிங்**

இன்று நான் என்னவாக இருக்கிறேன் என்பது எனது கல்வியால் தீர்மானிக்கப்பட்டது என்றார் மன்மோகன் சிங் அவர்கள். கல்விதான் ஒட்டு மொத்த சமூகத்தையும் முன்னேற்றும் ஆயுதம் என அதன்படியே தன் வாழ்வை அமைத்து, அதன் வழியே நல்லாட்சி நல்கி இன்று நம்மை விட்டுப் பிரிந்துள்ளார் மன்மோகன் சிங் அவர்கள்.

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்'

என்ற ஔவையின் வாக்கில், மாசறக் கற்றவனே மன்னனாய் இருந்தால் எப்படி இருக்குமோ அப்படி மாநில உரிமைகளையும், மக்களையும் மதித்து ஆட்சி புரிந்தவர் மன்மோகன் சிங் அவர்கள். அவரிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வரலாறு என்றும் அவரை நினைவில் வைத்திருக்கும்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

